# சங்கொலி பாண்டியனுக்கு எமது பதில்

அரைவேக்காட்டுதனமாய் 1000 பக்கம் அரைகுறையாய் தெரிந்து எழுதுவதைவிட, அரைப் பக்கம் 'நச்'சென உண்மையை சொன்னால்தான் குறைந்தபட்சம் வருங்கால தமிழினம் தலைவணங்கும்.




மா.பாண்டியனின் 'ஓநாய்க்காக, ஆடு அழுவதா?' எனும் தலைப்பில் மனிதம் மீது வசைமொழியை கக்கி, இராண்டரை பக்க கட்டுரையை, 23-09-2005 தேதியிட்ட ம.தி.மு.க-வின் அதிகாரபூர்வமான வார ஏடான, சங்கொலி இதழில் அச்சாகியுள்ளது.

நாகரிகம் கருதியும், ம.தி.மு.க தலைமை மற்றும் சங்கொலி ஆசிரியர் மீதுள்ள மரியாதை நிமித்தம் எமது பதில் கட்டுரையில் வசை பாட விரும்பவில்லை. மாறாக, கட்டுரையாளர் தமது போதையிலிருந்தும், மயக்கத்திலிருந்தும் விழிப்படைய வேண்டும் என்பதே எமது விருப்பம். ஏனெனில், நாமும் 'ஓருசனல் (Original) அக்மார்க்' தமிழனாய் பிறந்து விட்டோம் என்பதுதான்.

விஞ்ஞான பூர்வமான ஆய்வின் அடிப்படையில், பல சந்தேகங்களை கொண்டு கடந்த ஒரு வருடத்திற்கு முன்பே, அதாவது 30-07-2004 அன்றே மனிதம் சார்பாய் சேது சமுத்திர கப்பல் திட்டதினைப் பற்றிய ஓர் இடைக்கால அறிக்கையை மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் மற்றும் பிற அமைப்புகளுக்கும் கைச்சார்த்தப்பட்டது மட்டுமல்லாது, அவ்வறிக்கையை மனிதம் இணையம் வழியே ஆங்கித்திலும், 12 பக்கம் கொண்ட மனிதம் அச்சு இதழாகிய 'பொது மன்னிப்பு' வழியே தமிழிலும் வெளியிடப்பட்டது. அதற்கு பின் மனிதத்தின் ஆய்வுக் அறிக்கையை தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்து வெளிவரும் செய்தி ஊடகங்களிலும், ஏன், உலக அளவில் பல முன்னனி செய்தி ஊடகங்களில் அச்சாகி வெளிவந்தது. தற்போதும் எமது ஆய்வுக் அறிக்கையை மேற்கோள் காட்டி, கட்டுரைகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன.

மனிதம் அய்வுக் அறிக்கையை உரிய துறை மற்றும் அமைப்புகளிடம் அளிக்கப்பட்டு ஒரு வருடம் முடிந்த சூழலில், இன்னும் முழுமையான பதில் கொடுக்க முடியாமலும் அல்லது பதில் தெரியாமலும் திணறிக் கொண்டிருக்கின்றன. மாறாக, சேது கால்வாய் அமைப்பு, திட்டத்தை செயல்படுத்தும் முனைப்போடு வேலையில் வேகம் காட்டி வருகிறது.

மனிதம் அமைப்பு எந்த ஒரு ‘ஜே....-வுக்கும், ஊதுகுழலாய் இருந்திருக்கவில்லை. அதேபோல், எந்த தமிழின, மனிதஇன துரோகிக்கும் எக்காலத்திலும் அடிவருடாது. அது இலங்கையானாலும் சரி, பிற அமைப்புகளானாலும் சரி.

ஆனாலும், நிஜம் தான். கட்டுரையாளர் கூற்றுப்படி எமது அப்பன் / பாட்டன் வீடும், நிலமும், கடலும் எமது கண்முன்னே அழிக்கப்பட, அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு உறங்க முடியாது. எமது சந்ததியினருக்கு நாம் வீட்டுச் செல்லும் ஓரே சொத்து, எமது தமிழ் மொழியும், எமது பாட்டன் வீடும், நிலமும், எமது கடல் அன்னையும் மட்டுமே.

வரலாற்றை புறந்தள்ள மனிதம் ஒன்றும் மடையர்களல்ல. அதே சமயம், வரலாறு தந்த படிப்பினையை கொண்டு, உணர்ச்சிவயப்பட்டு, வரும்காலத்தையும் நாம் இழந்துவிடவும் தயாராக இல்லை.

கச்சத் தீவு பற்றி கண்ணீர் விடும் கட்டுரையாளருக்கு, சேது கால்வாய் தோண்டப்பட்டு சில வருடங்களில் அந்த கச்சத் தீவே கடலில் கரைந்து காணாமல் போகக்கூடிய சாத்தியகூறுகள் உண்டு என்பதை அறிவாரா?

சிங்கபூரில் தமிழன் அதிபரானார், மலேயாவில் மந்திரியானார் என்று பாடம் எடுக்கும் எனது சகோதரர், தமிழகம் பற்றிய வரலாற்றை மறக்க, மறைக்க பார்க்கிறாரா? தமிழ் நாட்டில் தமிழன் ஆட்சி, சுதந்திரத்திற்கு பின், வர வைக்க யோக்கிதை இல்லாவிடினும், அடுத்தவனுக்கு அறிவுரை கூற என்ன கசக்கிறது? அவ்வாறு ஆட்சி செய்த ஓரிரு தமிழனும், தேசிய அடி வருடியாக மட்டுமே தான் செயல்படமுடிந்தது.

சேது கால்வாய் தமிழனின் 145 அண்டு கனவுதான். இல்லையென யார் கூறியது.

சென்னையை பெயர்த்தெடுத்து அமெரிக்காவில் நீயூயார்க் பக்கமாகவோ, ரஷ்யாவின் மாஸ்கோ அருகிலோ கொண்டு வைக்க எல்லோருக்கும் சின்ன, சின்ன ஆசைதான். ஆனால் சாத்தியகூறுகள் உண்டா என்று பார்க்க வேண்டாமா? சேது கால்வாய் திட்டமும் அப்படித்தான்.

உடனே ‘நீரீ’ [NEERI] எனும் இந்திய தலைமை சுற்றுச்சூழல் அமைப்பு 300-க்கும் மேற்பட்ட பக்கங்களை கொண்ட அறிக்கை கொடுத்துள்ளது என நீங்கள் யோசிப்பது எம்மால் உணர முடிகிறது. அவ்வமைப்பு கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேயே பெருத்த சந்தேகம் வந்துள்ளது.

ஒரு பெரிய திட்டம் வரும்பொழுது அனைத்து கூறுகளையும் ‘நீரீ’ கணக்கில் எடுத்திருக்க வேண்டும். திட்டம் நடக்கும் இடத்தில் என்ன உள்ளது. எவ்வாறு உள்ளது. திட்டம் நிறைவேற்றப்படின், எப்படி இருக்க போகிறது. இயற்கை மாற்றங்களின் விளைவுகள் எப்படி போகும், இது போல் இன்னும் பிற அனைத்து வகையான சாத்தியக் கூறுகளையும் ஆய்வுக்கு உட்படுத்தபட வேண்டும். குறைந்தபட்சம் கடந்த 100 / 150 ஆண்டுகளில் என்னென்ன இயற்கை நிகழ்வுகள் நடைபெற்றது. இனி வரும் ஆண்டுகளில் என்னென்ன நிகழ்வுகள் நிகழக்கூடும், போன்றவற்றை ஆழமாய் ஆய்வுக்கு உட்படுத்தி இருத்தல் வேண்டும்.

அப்படி பார்த்தால் ‘நீரீ’ அறிக்கை திருப்திகரமானதாய் இல்லை என்பதே எமது வாதம். சேது கால்வாய் திட்டம் வர வேண்டும் என எதிர்பார்க்கும், மனிதம், அதே நேரத்தில் பல காரணங்களால் அதை மறு ஆய்வுக்கு,‘சேது கால்வாய்யை பன்னாட்டு நிபுணர் குழு

சுதந்திரமாக பரிசீலிக்க அனுமதிக்க வேண்டும்' என்பதை எம்போன்றோரின் கோரிக்கையாக உள்ளது.

- ஆழிப்பேரலை [Tsunami]யை பற்றிய ஒரு சிறு குறிப்பும் 'நீரீ' அறிக்கையில் இடம்பெறவில்லை. ஆழிப்பேரலையின் கொடுமையை இன்னும் நாம் மறந்திருக்க வாயிப்பில்லை. உலகின் அதிமுக்கிய ஆழிப்பேரலையின் வல்லுநரும், கனடா நாட்டின் பிரதமருக்கு முக்கிய ஆலோசகருமான திரு. தடா. மூர்த்தி, சேது கால்வாய் தோண்டப்பட்டபின் வரும் ஆழிப்பேரலையின் வீச்சு கடுமையாக இருக்கப்போகிறது என்கிறார்.

- இரண்டு எரிமலைகள் இந்திய பெருங்கடலில் உள்ளது குறித்த செய்தி முழு சோற்றில் மறைக்கபட்டுள்ளது.

- இந்திய அரசு முழு மனத்துடன் ஒப்புக் கொண்டு கையொப்பமிட்ட UN Law of Sea convention, 1982 பற்றிய எந்த ஒரு குறிப்பும் 'நீரீ' அறிக்கையில் இடம் பெறவில்லை. அதன் சரத்துக்களை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் மறந்து விட்டார்களா? அல்லது மறைத்துவிட எண்ணினார்களா?

- தனுஷ்கோடி மீனவமக்கள் வழிவழியாக செய்து வரும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்படும் என்று கூறும் 'நீரீ', ஒட்டுமொத்த தமிழக கிழக்கு கரை மீனவர்களும், மற்றும் இலங்கைத் தீவில் உள்ள வடக்கு மற்றும் வட கிழக்கு பகுதி தமிழ் மீனவர்களும் பாதிக்கப்படுவர் என்பதை சொல்லவில்லை.

- கடல் மாசைத் தவிர்ப்பது பற்றிய நெறிமுறைகள் என்ன என்பது தெளிவாய் இல்லை. கப்பலிலிருந்து கசிவு ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கூறப்படவில்லை.

- தோண்டப்பட்ட மண், வண்டல் மண், சேறு, கல் பாறைகளை எங்கு போடப்பட வேண்டுமென்று கூறப்படாவிடினும், தற்போது ஆழப்படுத்தும் பணியில் தோண்டப்பட்ட வண்டல், கொட்டப்படும் இடம் இயற்கைக்கு விரோதமானதாய் நடைபெற்றுவருவது குறித்து நம்மில் கவலை கொள்ள ஒரு சிலரைத் தவிர யாரும் முன்வரவில்லை.

- பவழப்பாறையின் பயன்களை பலரும் தற்போது அறிந்திருந்தபோதும், அவை பாதிப்படையாது என தண்டோரா போடப்பட்டாலும், இது முழுக்க முழுக்க உண்மைக்கு மாறான தகவல். அதுமட்டுமின்றி பவழப்பாறைகளில் வாழும் சுமார் 3,600 மேற்பட்ட தாவர விலங்கினங்கள் அழியும் சூழல் உருவாகி வருகிறது.

- மிக சமிபத்தில், மனோன்மனியம் சுந்தரனார் பல்கலை கழக விஞ்ஞானி திரு. அருனாசலம், சுதந்திரமான ஆய்வினை தற்போது அழப்படுத்தும் பணி நடைபெறும் இடத்திற்கு அருகில் மேற்கொண்டபோது, கடல் வெப்பம் மிக அதிகரித்துள்ளது தெரியவருகிறது. இது தொடருமேயானால், இன்னும் 10 – 15 ஆண்டுகளில், அந்த பகுதியில் மழை இல்லாமல் போகும். அதோடு மட்டுமல்லாது, அவ்விடத்தில் மீன்வளம் குறைய தொடங்கியுள்ளது, கடலில் உள்ள மிக அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

- பாக்-நீரினைப்பு பிரதேசத்தில் உள்ள படிவம் மற்றும் வண்டல் நகர்வு பற்றிய முழுமையான செய்தி 'நீரீ' ஆய்வில் இல்லை.

- 1860 முதல் 2000 வரை கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு நான்கு ஆண்டகளுக்குகொரு முறை இப்பிரதேசத்தில் புயல் ஏற்படும் நிலை உள்ளது.

ஆனால், புயல் பற்றிய அனைத்து செய்திகளும் 'நீரீ' அறிக்கை சொல்ல மறந்து விட்டது. இதனால் புயல் காலங்களில் சேது கால்வாயின் நிலை என்னவாகும் என்பது பற்றி எவரும் அறியார்.

- ஆழிப்பேரலைக்கு பின் ஏற்பட்ட படிவம் மற்றும் வண்டல், எதிர்பாராத அளவு மிக அதிகமாய் இருப்பதை இந்திய கடலியல் துறையும், இந்திய புவியியல் துறையும் குறிப்பை கொடுத்தது கட்டுரையாளருக்கு தெரிய வாய்ப்பில்லை போலும்.

- 'நீரீ'யின் அறிக்கையில் நில சரிவு குறித்த ஆய்வு நடாத்தியதாய் தெரியவில்லை, வினவுவது D.N. சேஷகிரி, இந்திய புவியியல் அறிஞர். பனாமா கால்வாய் இதுபோன்ற காரணத்தினாலேயே திருப்த்திகரமாய் அமையவில்லை என்பது உண்மை.

- கடந்த மாதம், 30-அகஸ்டு, 2005ல் யாழ் பல்கலைக்கழகத்தில், சேது கால்வாய் திட்டத்தினால் ஏற்படப்போகும் சமுக, பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் தாக்கம் பற்றிய ஓர் பொது கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் கிழிநொச்சியிலிருந்து செயல்பட்டு வரும் 'வடகிழக்கு மனித உரிமை அமைப்பின் செயலகம்' [NESOHR], கிழிநொச்சியிலிருந்து செயல்பட்டு வரும் மற்றோரு அமைப்பான 'பொருளாதார ஆலோசனை இல்லம்' [TECH], 'இலங்கை பச்சை அமைப்பு' [Green Movement of Sri Lanka], 'சுற்றச்சூழல் பௌண்டேசன்' [EFL] மற்றும் யாழ் பல்கலைக்கழக பிரதிநிதிகள் பங்கேற்றனர். இவர்களுடன் தமிழகத்தில் தற்போது வாழ்ந்து வரும் ஓர் இலங்கை தமிழரும், சேது கால்வாய் ஆதரவாளர்களுள் ஒருவரும் அக்கலந்துரையாடலில் பங்கெடுத்து 10 நிமிடம் உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடவேண்டிய செய்தி. மேற்கண்ட அனைவரும் கலந்துரையாடிய பின் NESOHR, 'உலக மனித உரிமை அமைப்புகளுக்கு ஓர் வேண்டுகோள்' என தலைப்பிட்ட பத்திரிக்கை செய்தி வெளியிடப்பட்டது. அதில் : 1. அய்க்கிய நாடுகளின் Convention on Transboundary Economic Impact Assessment (Espoo, 1991)ன் சரத்து குறிப்பிட்டப்படி இந்திய அரசம், இலங்கை அரசும் நடந்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக் கொண்டுள்ளது. 2. சேது கால்வாய் திட்டத்தால், இலங்கையின் வடகிழக்கு பிரதேசம் மிக மோசமாய் பாதிப்புக்கு உள்ளகுமாகையால், வடகிழக்கில் உள்ளோரோடு மேற்சொன்ன அய்.நா. சபையின் சரத்துப்படி வடகிழக்கில் ஆட்சி புரிவோரிடமும் இத்திட்டம் பற்றி கலந்து பேசும் வரை இத்திட்டத்தை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது, கட்டுரையாளருக்கு இச்செய்திகள் இன்னும் வந்து சேரவில்லையெனத் தெரிகிறது.

- நமக்கு தெரிந்தே அன்று பூம்பூகார் நகரமும், இன்று தனஷ்கோடியையும் கடல்கொண்டது. நமது பலரது நீண்டநாள் கோரிக்கை, பூம்பூகாரை அகழ்வுக்கு உட்படுத்த பட வேண்டுமென்பதே. அதேபோல், பல கோடி ஆண்டுகளுக்கு முன் (லெமூரியா) இந்தியாவிலிருந்து இலங்கை பிரிந்து சென்றது. இந்தியாவையும் இலங்கையையும் இணைப்பது ஆதாம் பாலம் மட்டுமே. நமக்கு இருக்கும் அய்யம், நம்முடைய தமிழர் இந்த காலகட்டத்தில் வாழ்ந்த வாழ்க்கைக்கு அட்தாட்சிகள் ஏதேனும் இங்கு தென்பட வாய்ப்புள்ளதால், அகழ்வுப் பணி இங்கு நடாத்தப்பட வேண்டுமென்பதே. ஆதாம் பாலம் இடிக்கப்படுவதால், தமிழனின் தொன்மையை நாம் இழந்து விட கூடாது.

- இக்கால்வாய் அமைவிடம் அருகிலேயே ஆசியாவின் மிக பெரிய கூடங்குளம் அணு உலை கட்டப்பட்டு வருவது அறிவோம். இன்னும் நான்கு வருடங்களில் அணு உற்பத்தி துவங்கவுள்ளது. அணு உற்பத்திக்கு தேவையான பொருட்கள் சேது

கால்வாய் வழியே கப்பல் மூலம் கொண்ட வரும் நேரத்தில், ஏதேனும் ஏற்பாடுமாயின் அதன் விளைவுகளால் பாதிக்கப்பட போவது நமது தமிழகமும், இலங்கையின் வடக்கு பகுதிதான் என்பதை இங்கு நினைவு கொள்ளல் வேண்டும்.

- திரு. K.S. ராமகிருஷ்ணன், முன்னால் சென்னை துறைமுக துணைக் தலைவர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், சேது கால்வாயை ஒரு கப்பல் பயன்படுத்தினால் கிட்டதட்ட ரூ. 60 லட்சம் (இந்திய பணம்) செலவாகுமென்றும், அதுவே இலங்கையை சுற்றிவர ரூ. 7 லட்சம் (இந்திய பணம்) மட்டுமே செலவு பிடிக்கும் என்பதை ஓப்பீட்டு கணக்கை கொடுத்துள்ளார். இதனால் பன்னாட்டுக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிச் செல்லுவதை பொருட்படுத்தாது எண்பது திண்ணம்.

சரி, திரும்பவும் சகோதரர் மா.பாண்டியனின் கட்டுரைக்கே வருவோம்.

மக்கள் முறையீடு ஒன்று இலங்கை 'சேது சமுத்திர தேசிய எதிர்ப்பு இயக்க'த்தில்', அங்கம்வகிக்கும் 123 அமைப்புக்களை கொண்ட ஒருங்கிணைப்பு, கொழும்பிலுள்ள இந்திய தூதுவரிடம் சென்ற 24-08-2005 அன்று கையளிக்கப்பட்டது. இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டவர்கள், கடந்த 30-08-2005 அன்று யாழ் பல்கலைகழக கலந்துரையாடலில் பங்கேற்ற 'இலங்கை பச்சை அமைப்பினர்'. மனிதத்திற்கு, இலங்கை திரிகோணமலையை மையமாகக் கொண்டு 'மனிதம் - இலங்கை' என்னும் சிறு அமைப்பு செயலாற்றி வருகிறது. இலங்கை 'சேது கால்வாய் தேசிய எதிர்ப்பு இயக்கத்தில்', 'மனிதம் - இலங்கை'யும் ஓர் அங்கத்தினர் மட்டுமே. ஆதலால், சங்கொலில் சொல்லப்பட்டது போன்று, மனிதம் செயல் இயக்குநர் கொழும்புக்கு சென்று வரவேண்டிய அவசியம் இல்லை. மக்கள் மூறையீடு கொழும்பில் கொடுக்கப்பட்ட நாளில், மனிதம் செயல் இயக்குநர் திரு. சுப்பிரமணியம் அவர்கள், கோவை J.M – 5ல், தமிழக காவல்துறையால் 2000-ம் ஆண்டு, 'விடுதலை புலிகளின் ஆதரவாளர்' என போடபப்ட்ட வழக்கில் நீதிமன்றம் சென்று வந்தார் என்பது தான் உண்மை. அதோடு, திரு. சுப்பிரமணியம் அவர்களிடம் கடவுச்சிட்டு [Passport] இல்லையென்பதும், அது இல்லாமல் வெளிநாடு செல்ல முடியாது என்பதும் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி.

இலங்கை அரசு ஆரம்பத்தில் சேது கால்வாய் திட்டத்தை எதிர்த்தது உண்மை. ஆனால், அன்மைக் காலமாய் திட்டத்தை எதிர்ப்பது போல் பாசாங்கு காட்டிக் கொண்டு, இன்றுவரை அமைதி காத்து வருவது உற்று நோக்கினால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இந்த செயலை கண்டித்தும், சேது கால்வாயை எதிர்த்தும் இலங்கையில் உள்ள பல மனித உரிமை அமைப்புக்களும், சுற்றுச்சூழல் அமைப்புக்களும் மற்றும் யாழ், மன்னார் மாவட்ட மீனவ சமுதாயமும் எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம் நடாத்தி கொண்டு உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மனிதம் பற்றி ஓர் சிறு அறிமுகம் இங்கு தேவை.

அரசு சாரா நிறுவனமான மனிதம், முதன்முதலாய் தென் இந்திய அளவில், முன்னனியிலுள்ள மனித உரிமைப் போராளிகளை அழைத்து, 'பொடா பாதுபாப்பின்மையா?' எனும் பொது கூட்டம் ஒன்றை கடந்த 11-10-2003 அன்று கோவை கொடீசியா அரங்கில் வெற்றிகரமாக நடாத்தி காட்டியது. இந்த நிகழ்வுக்கு ம.தி.மு.காவின் பொருளாளரும் அன்றைய மத்திய மரபுசாரா எரிசக்தி துறை அமைச்சருமான திரு.கண்ணப்பன் அவர்கள் கடித வாயிலாய் வாழ்த்தியதோடு, அய்யா திரு. பழ. நெடுமாறன், மனித உரிமை முன்னோடி திரு. V.R. கிருஷ்ண (அய்யர்) மற்றும் இன்னும் பலரின் வாழ்த்தோடு இக்கூட்டம் நடைபெற்றது குறித்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

கர்நாடகம் பெல்காம் சிறையில் 4 தமிழர்கள் தூக்கு தண்டனை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டவுடன், மனிதம் தூக்கு தண்டனையை எதிர்த்து இந்திய முழுக்க கையெழுத்து இயக்கம் நடத்தியது. அதற்காக முதல் கையொப்பமிட்டு தொடங்கி வைத்தவர்கள் ம.தி.மு.காவின் பொது செயலாளர் திரு. வைகோ அவர்களும், பொருளாளர் திரு. கண்ணப்பன் அவர்களும் தான். சுமார் இரண்டு லட்சம் கையெழுத்து பெற்று, இந்திய குடியரசு தலைவரிடம் இரண்டு மாதங்களுக்குள் அது சேர்க்கப்பட்டது.

தற்பொழுது பெங்களூர் சிறையில் உள்ள தமிழறிஞர் திரு. குணா, தஞ்சை பேரா. நெடுஞ்செழியன் மற்றும் 11 தமிழர்கள் (ஒருவர் ஜுன், 2005-ல் இறந்து விட்டார்) கடந்த 3 வருடங்களாய் சிறைப்பறவைகளாய் உள்ளது, அனைவரும் அறிந்ததே. மனிதத்தின் சிறு முயற்சியாக, தேசிய மனித உரிமை ஆணையத்தை அனுகியதன் விழைவாய், சென்ற மாதம் தேசிய மனித உரிமை ஆணையம், கர்நாடக சிறைத்துறை தலைவருக்கு அறிக்கையை நான்கு வாரத்திற்குள் சமர்பிக்க கட்டளையிட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்படும்பொழுதெல்லாம், இங்குள்ள மனிதம் செயலகம், ‘மனிதம் - இலங்கை’ அமைப்பின் மூலம் பிடிப்பட்ட மீனவர்களுக்கு இயன்ற உதவிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளும்.

அன்மையில் இலங்கை அரசு நெருக்கடி நிலை அறிவித்து, கொழும்பில் உள்ள பல ஆயிரம் தமிழர்களின் வீட்டை சோதனை என்ற பெயரில், இராணுவம் செய்யும் அட்டூழியங்களை மனிதம் கண்டித்து அறிக்கை வெளியிட்டது. இராணுவம் செய்த அட்டூழியங்களில் மனிதம் சார்ந்த தமிழர்களும் பாதிக்கப்பட்டனர் என்பதையும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

உலகில் எங்கெங்கு மனித உரிமை மீறல்களானாலும், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட நேர்ந்தாலும், அதனை தட்டி கேட்க வேண்டுமென்பதே ‘மனிதம்’ அமைப்பின் தலையாய நோக்கம். அப்படி இருக்கையில், நாம் பிறந்த மண்ணில் மீறல்கள் நடந்தால் அல்லது தெரிய வந்தால் கண்டிப்பாய் மனிதம் சும்மா வேடிக்கை பார்த்து கொண்டிருக்காது.

இவ்வகை செயல்களுக்காக, எவ்வித பிரதிபலனும் எதிர்பார்பது இதுவரை இல்லையென்பது, மனிதம் மூலம் பலன் பெற்றோர் அனைவரும் அறிவர். மனிதம் இதுவரை எவரிடமும் கையெந்தியது இல்லை. ஆனால், எங்களின் நிலையை தெரிந்த சில இந்திய தமிழ் நண்பர்கள் மட்டுமே உதவிக்கரம் கொடுத்து வருகின்றனர். மனிதம், அரசியல் கட்சி போன்று எங்கும், யாரிடமும், மாவட்ட வாரியாக பெட்டி பெட்டியாக பணம் பெற்றுக்கொண்டதும் இல்லை, பதவிக்காக யாரிடமும் காலில் விழுந்து அலைய வேண்டிய அவசியமும் இல்லை.

இனியாகிலும், கட்டுரை அச்சேரும் முன், சரியான தகவல்களை பெற்றுக் கொண்டு செய்தியினை வெளியிடலாமே. ம.தி.மு.க-வின் அதிகாரபூர்வமான வார ஏடான, சங்கொலியிடம் இனி இதை எதிர்பார்க்கலாமா?

முற்றும் / 22-09-2005

---

For more details, visit our Manitham
Web Site : www.tamilinfoservice.com/manitham
Manitham Contact :Email : manitham@tamilinfoservice.com / Mobile: +91-9443322543